1973 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முன்னால் நில அடமான வங்கிகளாக இருந்தபோது முன்கடன் தீர்க்கத் தாராளமாக பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது நிலவள வங்கிகளாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே முன் கடன், முன்னால் வாங்கப்பட்ட கடன் நிலத்தை வளப்படுத்துவதற்கு, நிலத்தில் அதிகமான விளைச்சல் காணப் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு இப்போதும் நாம் கடன் வழங்கிவருகிறோம்.

எலி ஒழிப்புத்திட்டம்

*** 624 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) அகில இந்திய எலி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்திற்கு மத்திய அரசு ஏதேனும் உதவி அளித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: விவசாயத்தைப் பெரிதும் பாழடிப்பது இந்த எலித் தொல்லைதான். ஆகவே இந்த எலிகளை ஒழிப்பதற்கு அரசு ஏதாவது நவீன முறைகளைக் கையாளுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தமிழக அரசுச் சார்பில் பயிர் பாதுகாப்பு பொறுத்தவரைக்கான உதவித் தொகையோடு எலி பாஷாணமாகிய, துத்தநாக பாஸ்பேட்டுக்கான உதவித் தொகை தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. தற்போது மருந்து பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. துத்தநாக பாஸ்பேட், எலிமருந்து போதுமான அளவிற்குப் பல்வேறு விவசாயக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு உழவர்களுக்குத் தேவைப்பட்டபோது பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப்: முன்பெல்லாம் வயல்களில் அதிகமாகப் பாம்புகள் இருக்கும். அதனால் எலிகள் வருவதில்லை. ஆனால் இப்போது பாம்புகள் எல்லாம் ஒழிந்துவிட்டன. ஆகவே அரசாங்கம் விஷம் இல்லாத பாம்புகளை, ஒரு பண்ணைபோல் வைத்து வளர்த்துவைத்து இந்த எலிகளைப் பிடிப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாம்பிற்காக எலி வளர்த்து எலியைப் பிடிக்கப் பூனையை வளர்க்கும் பிரச்சினை இல்லை.

[1973 ஏப்ரல் 3

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த எலித் தொல்லை காரணமாக மொத்தம் எவ்வளவு தானியம் நஷ்டமாகியிருக்கிறது என்பதைப்பற்றி ஏதாவது புள்ளிவிவரம் அமைச்சர் அவர்களின் கையில் இருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரங்களைத் தருவார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்விபோட்டால் அதற்கு வேண்டிய விளக்கத்தை அளிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எலி பிடிப்பதற்கு என்று இந்த அரசாங்கம் ஏதாவது உதவித் தொகை கொடுக்குமா? எலி பிடிப்பதை உற்சாகப்படுத்த ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றுமில்லை.

திரு. துரை முருகன் : இப்படிப் பிடிபட்ட எலிகளை என்ன செய்கிறார்கள்? எலிக்கறி சாப்பிடலாம் என்று முன்பு ஒரு மந்திரி வேறு ஒரு மாநிலத்தில் சொன்னார். அப்படி அதை உணவாகச் சாப்பிடும்வகையில் ஏதாவது பக்குவப்படுத்திச் செய்யமுடியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றுமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போதெல்லாம் பெருச்சாளிகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆகவே இந்த பெருச்சாளிகளைப் பிடிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வயல்களில் எதுவும் பெருச்சாளிகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பெருச்சாளிகளை ஒழிப்பதற்காக இப்போது சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிற நிலைமையில் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். வழக்கமாக ஆர்டர் வரிசையில்தான் அமைச்சர்களின் கேள்விகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் கேள்விக்குப் பின்னால் நம் வேளாண்மைத்துறை அமைச்சரின் கேள்வி வந்திருக்கிறது. அது நடைமுறை விதிகளுக்குச் சரியானதுதானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஆர்டர் படித்தான் கூப்பிட்டிருக்கிறேன். ஆனால் அமைச்சர்கள் இடம் மாறி உட்கார்ந்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பெருச்சாளிகளை ஒழிக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எந்தப் பெருச்சாளிகளை .....

1973 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதுவரையில் ஏழைகளைச் சுரண்டி வந்த பெருச்சாளிகளை ஒழிப்பதற்கு.

திருமதி த. ந. அனந்தநாயகி : நிலத்தில் உள்ள எலி, பெருச்சாளிகள் பற்றிக் கேள்வி. மற்றப் பெருச்சாளிகள்பற்றி விவசாயத் துறை அமைச்சருக்கு அக்கறை இல்லை. இது விவசாயிகளை, வயல்களைப் பொறுத்தது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வயல்களில் உள்ள எலிகளை ஒழிப்பது மட்டுமல்ல. பெருச்சாளிகளை ஒழிப்பது என்பது நிலச்சொந்தக்காரர்கள் என்றுதான் பொருள்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தெரிந்த பதிலுக்குக் கேள்வி கேட்கக்கூடாது.

திரு. கு. காமாட்சி : வயல்களுடைய வரப்புகள் அகலமாக இருப்பதால் தான் எலிகள் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அது உண்மைதான். ஆகவே இந்த வரப்புகளை எல்லாம் சீரமைக்கிற திட்டம் ஏதாவது அரசின் பரிசிலனையில் உள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் சித்தமல்லி ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டு அது நடைமுறையில் இருந்துவருகிறது. அங்கு வரப்புகள் எல்லாம் ஒழுங்காகச் சரி செய்யப்பட்டு இன்றையத்தினம் அப்பகுதியில் மேலும் ப இடங்களுக்கு விஸ்தரிக்கத் திட்டமிருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு : தஞ்சை மாவட்டத்திலும் வேறு பல மாவட்டங்களிலும் எலி ஒழிப்பு வாரம் என்ற பெயரால் சில ஆண்டுகளுக்கு முன்பாக தொடர்ந்து கொண்டாடப்பட்டு வந்தது. அத்தகைய வாரங்கள் இப்போது நடைமுறையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மத்திய அரசுச் சார்பில் இத்திட்டம் 1968–69-ல் இருந்தது. அது இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது.

திரு. என். கே. பழனிசாமி : கனம் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள், எலி மருந்து விநியோகத்தை நிறுத்திவைத்திருப்பதாக. என்ன காரணத்தினுல் இந்த விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது ? பஞ்சாயத்து ஒன்றியங்கள்மூலம் ஏன் அதை விநியோகிக்கக்கூடாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சப்ஸிடி கொடுப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேனேதவிர மருந்து கொடுப்பது நிறுத்திவைக்கப்படவில்லை. எல்லா கோடவுன்களிலும் இந்த எலி பாஷாணம்

இருக்கிறது. எந்த நேரத்திலும் அவர்களின் தேவைக்கேற்ப அது கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : சுத்தமல்லி ஸ்கீம், வாட்டர் மானேஜ்மென்ட், ட்ரெயினேஜ், இவையெல்லாம் பகிர்ந்து கொடுக்கக்கூடிய நிலேயில் நல்ல திட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செயல்படுத்த அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வாட்டர் மானேஜ்மென்ட் ஸ்கீம் மட்டுமல்ல சாயில் கன்சர்வன்சி ஸ்கீமில் அது செய்யப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் பெரிய பெரிய வரப்புகள் இருந்து அதில் எலிகள் தங்குவதற்கு வாய்ப்புகள் இருந்தன. அதைப் போக்க சுத்தமல்லி ஸ்கீம் உருவாக்கப்பட்டு ஒழுங்காக வரப்புகள், வாய்க்கால்கள், எல்லாம் கவனிக்கப்பட்டு இன்று நல்ல முறையில் இருந்து வருகிறது. மேலும் தஞ்சை மாவட்டத்தில் அதை விஸ்தரிக்கத் திட்டமிருக்கிறது. மற்றப் பகுதிகளுக்கு விஸ்தரிப்பதற்குத் திட்டம் இப்போது இல்லே.

திரு. வை. பாலசுந்தரம் : சில நகராட்சிகளில் நகரப்பகுதிகளில் உலாவுகிற பெருச்சாளிகளேப் பிடிக்க காசு வழங்கப்படுகிறது. அதேபோல் நம் மாநகராட்சியிலும் கடைப்பிடிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்தப் பொறுப்பு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களிடம் இருக்கிறது. அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

ஐயாவையனுற்றங்கரையோரச் சாலே

*** 625 வினு.—**திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் ஐயாவையனுறு ஆற்றுக் கரையில் தார்சாலே அமைத்திடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனேயிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இட்டப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படட்டது என்பதைக் குறிக்கும்.]